சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.125/2021

18.06.2025

வா.சா.2 திரு.,அன்புமணி, த/பெ. சிவப்பிரகாசம்

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல எனக்கு சம்மன் வந்தது. நான் திருவிடைவாசல் வாதி ராஜேந்திரன் வீட்டிற்கு எதிர்புறம் வசித்து வருகிறேன். வாதி ராஜேந்திரனை 60 வருடங்களாக எனக்கு தெரியும். 1 ஆம் பிரதிவாதி குருமூர்த்தியை அவரது சிறுவயதிலிருந்தே எனக்கு தெரியும். வாதியும் 1 ஆம் பிரதிவாதியும் நண்பர்கள் என்றாலும் பக்கத்து பக்கத்து வீடு என்றாலும் சரிதான். வீட்டு பிரச்னைக்காக வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. ராஜேந்திரனின் தாயார் பெயர் பட்டம்மாள். பட்டம்மாள் 1992 ல் இறந்துவிட்டார், தேதி தெரியாது. பட்டம்மாள் 20.02.1991 ல் உயில் எழுதிவைத்துள்ளார். உயிலில் பட்டம்மாள் கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை, கைரேகை வைத்தார். பட்டம்மாளிடம் பத்திரம் எழுதிய கோபு கைரேகை வாங்கினார். பட்டம்மாளுக்கு உயில் எழுதும்போது 70 வயது இருக்கும். பட்டம்மாளுக்கு அவரின் தாயார் மூலமாக சொத்து கிடைத்தது. பட்டம்மாளின் தாயார் பெயர் எனக்கு தெரியாது. பட்டம்மாளுக்கு 3 ஆண் வாரிசுகளும், 2 பெண் வாரிசுகளும் உள்ளார்கள். சங்கரன், மணி, ராஜேந்திரன் ஆண் வாரிசுகளாவார்கள். பெண் வாரிசுகள் பெயர் தெரியவில்லை. உயிலில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் பட்டம்மாளை யாரும் பார்த்துக்கொள்ளவில்லை என்றால் மகன் ராஜேந்திரன் மட்டும் பார்த்துக்கொள்வதாக எழுதியிருந்தார். பட்டம்மாளின் மற்ற வாரிசுகள் வெளியூர் சென்றுவிட்டார்கள். உயிலில் கண்ட சொத்தின் சர்வே எண் 13/24 ஆகும். அந்த சொத்தின் விஸ்தீரணம், நான்கெல்லையும் தெரியாது. பட்டம்மாள் உயிலில் கைரேகை வைக்கும் போது சுயநினைவுடன் இரந்தாரா என்றால் இருந்தார். உயில் எழுதிய பின்னர் எழுதிக்காட்டப்பட்டதா என்றால் படித்துக்காட்டினார்கள். உயிலில் நானும் கழுவையன் என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டுள்ளோம். மற்ற வாரிசுகளை மறைத்து வாதி மட்டும் உயில் எழுதி வாங்கினார் என்றால் சரியல்ல. பட்டம்மாள்

உயில் எழுதிய விவரம் மற்ற வாரிசுகளுக்கு தெரியுமா தெரியாதா என்று எனக்கு தெரியாது. குருமூர்த்தி ராஜேந்திரன் இடத்திற்கு மேல்புறம் வசித்து வருகிறார். குருமூர்த்தி 50 வருடங்களுக்கு மேலாக அங்கு குடியிருந்துவருகிறார். ராஜேந்திரன் 1990 வரை வெளியூரில் வேலையில் இருந்தார். பின்னிட்டு திருவிடைவாசலில் வசித்து வந்தார். ராஜேந்திரன் 1990 ல் திருவிடைவாசல் வந்த பின்னிட்டு வாதிக்கும், ராஜேந்திரனுக்கும் இடத்து பிரச்னை நடந்தது என்றால் சரிதான். ராஜேந்திரன் எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல, இரண்டு பேருமே எனக்கு வேண்டியவர்கள்தான்.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.